மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை (சட்ட முன்வடிவு எண். 51/1993) @ திருத்தப்பட்டபடி நிறைவேற்றப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, திருத்தப்பட்டபடி, ஏற்கப்பட்டது.

7. அறிவிப்பு

பனைப்பொருட்கள் வளர்ச்சி வாரியச் சட்ட முன்வடிவு, 1993. (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1993)-ஐ பேரவையில் ஆய்வு செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

செல்லுமா செல்லாதா என்றெல்லாம் கேட்டார்களே, இதை ஆய்வு செய்து நிறைவேற்றுவதற்கு ஆளுநர் அவர்கள் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

(அஅ) பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியச் சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பனைப் பொருட்கள் வளர்ச்சி வாரியச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1993). மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

@ 30-12-1993-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.